பிரஸார் பாரதி

அகில இந்திய வானொலி, சென்னை - 4

28 10 2025 6 45

செவ்வாய்க்கிழமை காலை

தலைப்புச் செய்திகள்

1. சர்வதேச சூரியசக்தி கூட்டமைப்பின் 8வது மாநாட்டை குடியரசுத்தலைவர் திருமதி திரௌபதி முர்மு புதுதில்லியில் இன்று தொடங்கி வைத்து உரையாற்றுகிறார்.

2. தமிழகத்தில் வாக்காளர் பட்டியல் சிறப்பு திருத்தப் பணிகள் மேற்கொள்ளப்பட வேண்டியது அவசியம் என்று மத்திய இணையமைச்சர் டாக்டர் எல். முருகன் தெரிவித்துள்ளார்.

3. வங்கக்கடலில் நிலை கொண்டுள்ள Montha புயல் வலுவடைந்து, ஆந்திர மாநிலம் காக்கிநாடா அருகே இன்று மாலை கரையை கடக்கக்கூடும் என்று வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

4. தொடர் மழை காரணமாக சென்னை மற்றும் திருவள்ளூர் மாவட்டங்களில் உள்ள பள்ளிகளுக்கு மட்டும் இன்று விடுமுறை அறிவிக்கப்பட்டுள்ளது.

5. 23 வயதுக்குட்பட்டோருக்கான உலக மல்யுத்த சாம்பியன் போட்டியில் இந்தியாவின் சுஜித் தங்கப் பதக்கம் வென்றார்.

--- இனி விரிவான செய்திகள் ---

<<<<>>>>

சர்வதேச சூரியசக்தி கூட்டமைப்பின் 8வது மாநாட்டை குடியரசுத்தலைவர் திருமதி திரௌபதி முர்மு புதுதில்லியில் இன்று தொடங்கி வைத்து உரையாற்றுகிறார்.

நான்கு நாட்கள் நடைபெறும் இந்த மாநாட்டில் 124 நாடுகளைச் சேர்ந்த பிரதிநிதிகள் கலந்துகொள்கின்றனர்.

வெளிநாடுகளைச் சேர்ந்த 40 அமைச்சர்கள் இந்த மாநாட்டில் கலந்துகொள்கின்றனர்.

உலக நாடுகளுக்கு இடையே சூரியசக்தி பயன்பாட்டை மேலும் அதிகரிப்பது குறித்து இந்தக் கூட்டத்தில் விவாதிக்கப்பட உள்ளது.

அனைத்து மக்களுக்கும் சூரியசக்தியின் பயன்பாட்டை மலிவான விலையில் கிடைப்பதற்கு தேவையான நடவடிக்கைகள் குறித்து விவாதிக்கப்படுகிறது.

உலக அளவில் சூரிய சக்தியை அதிகளவில் பயன்படுத்தும் 3வது நாடாக இந்தியா திகழ்கிறது.

<<<<>>>>

தமிழகத்தில் வாக்காளர் பட்டியல் சிறப்பு திருத்தப் பணிகள் மேற்கொள்ளப்பட வேண்டியது அவசியம் என்று தகவல் ஒலிபரப்புத்துறை இணையமைச்சர் டாக்டர் எல். முருகன் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில், போலி வாக்காளர்கள் கண்டறியப்பட வேண்டிய தேவை உள்ளதாகவும், இரட்டை வாக்குகள் அகற்றப்பட வேண்டியதும் மிக முக்கியம் என்றும் அவர் கூறியுள்ளார்.

தமிழக முதலமைச்சர் திரு. மு.க. ஸ்டாலின் வாக்காளர் பட்டியல் சிறப்புத் திருத்தப் பணிகளுக்கு எதிர்ப்பு தெரிவித்து வருவது தேவையில்லாத ஒன்று என்று அவர் குறிப்பிட்டுள்ளார்.

<<<<>>>>

வங்கக்கடலில் நிலை கொண்டுள்ள Montha புயல் இன்று காலை தீவிர புயலாக வலுவடையும் என்று வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

ஆந்திர மாநிலம் காக்கிநாடா அருகே இன்று மாலை அல்லது இரவு இந்தப் புயல் கரையை கடக்கக்கூடும் என்று அந்த மையம் கூறியுள்ளது.

தற்போது அந்தப் புயலானது வடக்கு, வடமேற்கு திசையில் மணிக்கு 17 கிலோ மீட்டர் வேகத்தில் நகர்ந்து வருவதாக சென்னை வானிலை ஆய்வு மைய இயக்குநர் திரு. செந்தாமரைக்கண்ணன் தெரிவித்துள்ளார்.

இதன் காரணமாக ஆந்திர கடற்கரை பகுதிகளில் கனமழை முதல் அதிகன மழைக்கு வாய்ப்பிருப்பதாகவும் கூறப்பட்டுள்ளது.

தமிழகத்தில் திருவள்ளூர் மாவட்டத்தில் ஒருசில இடங்களில் கனமழை முதல் அதிகன மழைக்கு வாய்ப்பிருப்பதாகவும் வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

சென்னை, செங்கல்பட்டு, காஞ்சிபுரம், ராணிப்பேட்டை, தேனி, திருநெல்வேலி, தென்காசி மற்றும் கன்னியாகுமரி மாவட்டங்களிலும் ஒருசில இடங்களில் கனமழைக்கு வாய்ப்புள்ளதாக அந்த மையம் கூறியுள்ளது.

இந்நிலையில் திருவள்ளூர் மாவட்டத்தின் கடலோரப் பகுதிகளில் புயலின் தாக்கம் அதிகரித்து காணப்படுகிறது.

தொடர்ந்து மழை பெய்து வருவதால், குறிப்பாக பொன்னேரி பழவேற்காடு கும்மிடிப்பூண்டி மற்றும் அதனை சுற்றியுள்ள கடலோர கிராமங்களில் மழை நீர் சூழ்ந்துள்ளது.

மாவட்டத்தின் பல இடங்களில் மின்சாரம் துண்டிக்கப்பட்டு, முன் எச்சரிக்கை நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

இதற்கிடையே தொடர்மழை காரணமாக திருவள்ளூர் மற்றும் சென்னையில் பள்ளிகளுக்கு மட்டும் விடுமுறை அறிவிக்கப்பட்டுள்ளது.

<<<<>>>>

சென்னையில் பரவலாக மழை பெய்துவரும் நிலையில் பெருநகர சென்னை மாநகராட்சியில் அமைக்கப்பட்டுள்ள ஒருங்கிணைந்த கட்டளை மற்றும் சேவை மையத்தில் துணை முதலமைச்சர் திரு. உதயநிதி ஸ்டாலின் ஆய்வு மேற்கொண்டார்.

மழை தொடர்பாக வரும் கோரிக்கைகள் மற்றும் மக்களின் தேவை என்ன என்பதை அவர் கேட்டறிந்தார்.

முன்னதாக சென்னையில் பல்வேறு பகுதிகளில் நடைபெற்று வரும் மழை தொடர்பான முன்னேற்பாட்டுப் பணிகளை அவர் பார்வையிட்டார்.

தேனாம்பேட்டை, சூளைமேடு, விருகம்பாக்கம், மேற்கு நமச்சிவாயபுரம் பகுதியில் நடைபெற்று வரும் பணிகளை அவர் நேரில் ஆய்வு செய்தார்.

<<<<>>>>

தமிழகத்தில் கொள்முதல் செய்யப்படும் நெல்லின் ஈரப்பதத்தை மத்தியக்குழுவினர் தேனி மாவட்டத்தில் ஆய்வு மேற்கொண்டனர்.

இம்மாவட்டத்தில் மழையால் பாதிக்கப்பட்ட விளைநிலங்களையும், நெற்பயிர்கள் பாதிப்படைந்தது குறித்தும் அவர்கள் நேரடியாக ஆய்வு செய்தனர்.

மாவட்டத்தில் அதிக அளவில் மழை பெய்து வருவதால் நெல்லில் ஈரப்பதம் அதிகளவில் இருப்பதாக தேனி மாவட்ட ஆட்சியர் திரு. ரஞ்சித் சிங் செய்தியாளர்களிடம் தெரிவித்தார்.

**<<<<>>>>**

*இருவரிச் செய்திகள்*

இஸ்ரேல் - பாலஸ்தீனத்திற்கு இடையே நடைபெற்ற சண்டையின்போது காஸா பகுதியில் உயிரிழந்த பிணைக் கைதிகளின் உடல்களை ஹமாஸ் அமைப்பினர் செஞ்சிலுவை சங்கத்திடம் ஒப்படைத்துள்ளனர்.

-----------

அணு ஆயுதங்களை பரிசோதித்து பார்த்திருக்கும் ரஷ்யாவின் செயல், கண்டிக்கத்தக்கது என்று அமெரிக்க அதிபர் திரு. டோனல்ட் ட்ரம்ப் தெரிவித்துள்ளார்.

இது இரு நாடுகளுக்கு இடையேயான உறவில் விரிசலை ஏற்படுத்தும் என்றும் அவர் கூறியுள்ளார்.

-----------

Montha புயலால் ஏற்படும் பாதிப்பை எதிர்கொள்ளும் வகையில் பிஜேபி உறுப்பினர்கள் பணியாற்ற வேண்டும் என்று அக்கட்சியின் தலைவர் திரு. ஜெ.பி. நட்டா கேட்டுக்கொண்டுள்ளார்.

-----------

வடகிழக்கு மாநிலங்களில் விவசாயம் மற்றும் தோட்டக்கலைத் துறை வளர்ச்சிப் பணிகள் குறித்து மத்திய அமைச்சர் திரு. ஜோதிர் ஆதித்ய சிந்தியா ஆய்வு மேற்கொண்டார். விவசாய பணிகளுக்கு ட்ரோன்களை அதிகளவில் பயன்படுத்துமாறும் அவர் கேட்டுக்கொண்டார்.

-----------

வட மாநிலங்களில் கொண்டாடப்பட்டு வரும் சட் பண்டிகை இன்றுடன் நிறைவடைகிறது.

-----------

நடப்பாண்டின் கரீப் பருவ காலத்தில் விவசாயிகளிடமிருந்து பயிர்களை கொள்முதல் செய்வதற்கு 15 ஆயிரம் கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதாக மத்திய வேளாண் துறை அமைச்சர் திரு. ஷிவ்ராஜ் சிங் சௌஹான் தெரிவித்துள்ளார்.

-----------

காஞ்சிபுரம் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் நெல் ஈரப்பதத்தை உயர்த்துவது தொடர்பாக ஆய்வு செய்த மத்திய குழுவினர் ஆட்சியர் திருமதி கலைச்செல்வி மோகனுடன் ஆலோசனை நடத்தினர்.

-----------

வைகை அணையிலிருந்து பாசனத்திற்காக தண்ணீர் திறந்துவிடப்பட்டுள்ளது.

-----------

சர்தார் வல்லபாய் பட்டேலின் பிறந்த தினத்தையொட்டி வரும் 31ஆம் தேதி திருவள்ளூர் மாவட்ட நேரு யுவகேந்திரா சார்பில் பல்வேறு நிகழ்ச்சிகள் நடத்தப்பட்ட உள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

-----------

மயிலாடுதுறை மாவட்டம் வைத்தீஸ்வரன் கோயிலில் சூரசம்ஹார விழா விமரிசையாக நடைபெற்றது.

-----------

சென்னை மாநகராட்சிக்கு உட்பட்ட பகுதிகளில் போதைப்பொருள் வைத்திருந்த இரண்டு பேரை காவல்துறையினர் கைது செய்தனர்.

-----------

23 வயதுக்குட்பட்டோருக்கான உலக மல்யுத்த சாம்பியன் போட்டியில் இந்தியாவின் சுஜித் தங்கப் பதக்கம் வென்றார்.

செர்பியாவில் நடைபெற்று வரும் இப்போட்டியின் ஆடவர் 65 கிலோ எடைப் பிரவின் இறுதியாட்டத்தில் அவர், இப்பதக்கத்தைக் கைப்பற்றினார்.

---------------

ஆசிய இளையோர் விளையாட்டுப் போட்டிகளில் இந்தியாவின் Lanchenba Singh அரையிறுதிக்கு முன்னேறியுள்ளார்.

பஹ்ரைனில் நடைபெற்று வரும் இப்போட்டியின் ஆடவர் குத்துச்சண்டை 50 கிலோ எடைப்பிரிவு காலிறுதி ஆட்டத்தில் அவர் 4-1 என்ற புள்ளிக் கணக்கில் தாய்லாந்து வீரரை வென்றார்.

இப்போட்டியின் ஆடவர் 66 கிலோ எடைப் பிரிவில் Anand Deshmukh-கும் அரையிறுதிக்கு முன்னேறியுள்ளார்.

--------------

ரஞ்சிக் கோப்பை கிரிக்கெட் போட்டியில் தமிழக அணிக்கு எதிரான ஆட்டத்தின் 3வது நாளான நேற்று நாகாலாந்து முதல் இன்னிங்சின் ஆட்டநேர இறுதியில் 5 விக்கெட் இழப்பிற்கு 365 ரன் எடுத்தது.

பெங்களூருவில் நடைபெற்று வரும் இப்போட்டியில் தமிழக அணி முதல் இன்னிங்சில் 3 விக்கெட் இழப்பிற்கு 512 ரன் எடுத்திருந்த நிலையில் ஆட்டத்தை முடித்துக்கொள்வதாக அறிவித்தது.

<<<<>>>>